# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT CHENGALPATTU

## MCOP No. 20/2023

| | |
|---|---|
| Ranking of Witness | PW.2 |
| Name | திரு.பிரகாஷ் |
| Father's Name/Husband Name | திரு.சீனிவாசன் |
| Age | 29 |
| Address | 4/103, கரியாம்பட்டி, புன்னம்சத்திரம், கரூர் மாவட்டம். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.03.2026.

**முதல் விசாரணை –**

நான் இந்த வழக்கின் 3ம் மனுதாரர். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் உண்மை என்று உறுதி கூறுகிறேன். மனுபடி உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளவாறு விபத்து ஏற்பட்டதை அறிந்து நான் சென்று பார்த்து சின்னதம்பியை மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அனுப்பி வைத்தேன் என்பது சரிதான். எந்த வாகனம் இடித்தது, விபத்து எவ்வாறு நடந்தது என்ற விவரங்களை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்தை நேரடியாக பார்த்ததாக நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் புகார் அளித்ததாகவோ, போலிசார் என்னை விசாரித்ததாகவோ, சாட்சி பட்டியலில் என்னை சாட்சியாக குறிப்பிட்டதாகவோ காண்பிக்கும் வகையில் எந்த ஒரு ஆவணமும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை நேரடியாக நான் பார்க்காமல் மனுதாரருக்கு சாதகமாக சாட்சியமளிக்கவேண்டும்

4/3/26.

S. Prakash 04/03/2026

என்பதற்காக நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 04.03.2026 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.